| | இந்தியஅரசு<br>இந்திய வானிலை ஆய்வுதுறை<br>மண்டல வானிலை ஆய்வுமையம்<br>6, கல்லூரிசாலை<br>சென்னை -- 600006<br>தொலைபேசி: 044- 2827195 | | GOVERNMENT OF INDIA<br>INDIA METEOROLOGICAL DEPARTMENT<br>Regional Meteorological Centre<br>No. 6, College Road<br>Chennai–600006<br>Phone: 044- 28271951 |
|---|---|---|---|


| நாள்: 28-11-2025 | நேரம்: 15:40 மணி |
|---|---|

# தென்மேற்கு வங்கக்கடலில் "டிட்வா" புயல்

நேற்று (27-11-2025) தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய இலங்கை கடலோரப்பகுதிகளில் நிலவிய "டிட்வா" புயல் வடக்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, இன்று (28-11-2025) காலை 1130 மணி அளவில் இலங்கை கடலோரப்பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில், இலங்கை திரிகோண மலையிலிருந்து தென்மேற்கே சுமார் 30 கிலோ மீட்டர் தொலைவிலும், இலங்கை மட்டக்கிளப்பிலிருந்து வடமேற்கே 110 கிலோ மீட்டர் தொலைவிலும், காரைக்காலிலிருந்து தெற்கு-தென்கிழக்கே 310 கிலோ மீட்டர் தொலைவிலும், புதுவையிலிருந்து தெற்கு-தென்கிழக்கே 420 கிலோ மீட்டர் தொலைவிலும், சென்னையிலிருந்து தெற்கே 520 கிலோ மீட்டர் தொலைவிலும் நிலை கொண்டுள்ளது.

இது, மேலும் வடக்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, இலங்கை கடலோரப்பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளை கடந்து, 30-ஆம் தேதி அதிகாலை, தென்மேற்கு மற்றும் அதனை ஒட்டிய மத்தியமேற்கு வங்கக்கடல் பகுதிகளில், வடதமிழகம் – புதுவை மற்றும் அதனை ஒட்டிய தெற்கு ஆந்திர கடலோரப்பகுதிகளுக்கு அருகே நிலவக்கூடும்.

28-11-2025: தென்தமிழகத்தில் அநேக இடங்களிலும், வடதமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தென்தமிழக கடலோர மாவட்டங்களில் பலத்த தரைக்காற்று மணிக்கு 50 முதல் 60 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 70 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.

வடதமிழக கடலோர மாவட்டங்கள், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் பலத்த தரைக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.

இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள், மற்றும் காரைக்கால் பகுதிகளில், ஒருசில இடங்களில் கன முதல் மிக கனமழையும், ஓரிரு இடங்களில் அதி கனமழையும் பெய்யக்கூடும்.

தூத்துக்குடி, சிவகங்கை, அரியலூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், கன்னியாகுமரி, திருநெல்வேலி, விருதுநகர், மதுரை, திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யவாய்ப்புள்ளது.

29-11-2025: வடதமிழகத்தில் பெரும்பாலான இடங்களிலும், தென்தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

டெல்டா மற்றும் அதனை ஒட்டிய கடலோர மாவட்டங்கள், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், பலத்த தரை காற்று மணிக்கு 70 முதல் 80 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 90 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.

ஏனைய கடலோர மாவட்டங்களில் பலத்த தரைக்காற்று மணிக்கு மணிக்கு 55 முதல் 65 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 75 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.

மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்கள் மற்றும் புதுவையில் ஒருசில இடங்களில் கன முதல் மிக கனமழையும், ஓரிரு இடங்களில் அதி கனமழையும் பெய்யக்கூடும்.

புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், அரியலூர், பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி, சேலம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, காஞ்சிபுரம், சென்னை, திருவள்ளூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, நாமக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யவாய்ப்புள்ளது.

**30-11-2025:** வட தமிழகத்தில் அநேக இடங்களிலும், தென்தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தென்தமிழக கடலோர மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் பலத்த தரைக்காற்று மணிக்கு 55 முதல் 65 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 75 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.

ஏனைய வடதமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் புதுவையில் பலத்த தரைக்காற்று மணிக்கு 60 முதல் 70 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 80 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.

திருவள்ளூர் மற்றும் இராணிப்பேட்டை ஒருசில இடங்களில் கன முதல் மிக கனமழையும், ஓரிரு இடங்களில் அதி கனமழையும் பெய்யக்கூடும்.

சென்னை, காஞ்சிபுரம், வேலூர், செங்கல்பட்டு, திருப்பத்தூர், கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், சேலம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்கள் மற்றும் புதுவையில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யவாய்ப்புள்ளது.

**01-12-2025:** தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.
திருவள்ளூர் மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

**02-12-2025 முதல் 04-12-2025 வரை:** தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

## மீனவர்களுக்கான எச்சரிக்கை:

### வடதமிழக – புதுவை கடலோரப்பகுதிகள்:

**28-11-2025:** காலை முதல் சூறாவளிக்காற்று மணிக்கு 50 முதல் 60 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 70 கிலோ மீட்டர் வேகத்திலும், அதன் பிறகு, மாலை முதல் காற்றின் வேகம் உயர்ந்து, மணிக்கு 60 முதல் 70 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 80 கிலோ மீட்டர் வேகத்திலும், 29-11-2025 காலை முதல் 30-11-2025 காலை வரை மணிக்கு 70 முதல் 80 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 90 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். 01-12-2025 காலை முதல் காற்றின் வேகம் படிப்படியாக குறைந்து மணிக்கு 55 முதல் 65 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 75 கிலோ மீட்டர் வேகத்திலும், 02-12-2025: மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.

### தென் தமிழக கடலோரப்பகுதிகள்:

**28-11-2025:** காலை முதல் சூறாவளிக்காற்று மணிக்கு 55 முதல் 65 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 75 கிலோ மீட்டர் வேகத்திலும், அதன் பிறகு, காற்றின் வேகம் உயர்ந்து, 28-11-2025 மாலை முதல் 30-11-2025 நள்ளிரவு வரை மணிக்கு 60 முதல் 70 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 80 கிலோ மீட்டர் வேகத்திலும், அதன் பிறகு 01-12-2025 காலை முதல் 02-12-2025 வரை காற்றின் வேகம் குறைந்து மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.

**குமரிக்கடல், மன்னார் வளைகுடா பகுதிகள் மற்றும் தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகள் :**

**28-11-2025: காலை முதல் சூறாவளிக்காற்று மணிக்கு 65 முதல் 75 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 85 கிலோ மீட்டர் வேகத்திலும், அதன் பிறகு, காற்றின் வேகம் உயர்ந்து, 28-11-2025 இரவு முதல் 30-11-2025 காலை வரை மணிக்கு 70 முதல் 80 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 90 கிலோ மீட்டர் வேகத்திலும், வீசக்கூடும். 01-12-2025 காலை முதல் காற்றின் வேகம் படிப்படியாக குறைந்து மணிக்கு 55 முதல் 65 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 75 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.**

**தெற்கு ஆந்திர கடலோரப்பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய மத்தியமேற்கு வங்கக்கடல் பகுதிகள்:**

**28-11-2025: காலை முதல் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும், அதன் பிறகு, காற்றின் வேகம் உயர்ந்து மாலை முதல் மணிக்கு 50 முதல் 60 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 70 கிலோ மீட்டர் வேகத்திலும், 29-11-2025 மாலை முதல் 30-11-2025 காலை வரை மணிக்கு 60 முதல் 70 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 80 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். அதன் பிறகு, காற்றின் வேகம் குறைந்து 01-12-2025 காலை முதல் காற்றின் வேகம் மணிக்கு 50 முதல் 60 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 70 கிலோ மீட்டர் வேகத்திலும், மாலை முதல் காற்றின் வேகம் குறைந்து மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.**

**கேரள கடலோரப்பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகள் & லட்ச தீவு – மாலத்தீவு பகுதிகள்:**

**28-11-2025 மற்றும் 29-11-2025: சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்திலும், 30-11-2025 மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.**

- **ஆழ் கடல் மீனவர்கள் மேற்குறிப்பிட்ட நாட்களில் இப்பகுதிகளை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.**
- **மேற்குறிப்பிட்ட நாட்களில் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.**

**மேலும் விவரங்களுக்கு: mausam.imd.gov.in/chennai இணையதளத்தை காணவும்.**

**பா. செந்தாமரை கண்ணன்**
**விஞ்ஞானி - F**
**தென் மண்டல தலைவருக்காக**
**மண்டல வானிலை ஆய்வு மையம்,**
**சென்னை**

# வகைப்பாடு


| | |
|---|---|
| வடதமிழக மாவட்டங்கள் | சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி,<br>தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, வேலூர், திருப்பத்தூர்,ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, சேலம், தர்மபுரி, நாமக்கல், நீலகிரி, திருப்பூர்,கோயம்புத்தூர், ஈரோடு, கரூர், திருச்சிராப்பள்ளி, அரியலூர், பெரம்பலூர் |
| தென்தமிழக மாவட்டங்கள் | ராமநாதபுரம், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, தேனி, கன்னியாகுமரி, சிவகங்கை, விருதுநகர், திண்டுக்கல், மதுரை |
| உள்தமிழக மாவட்டங்கள் | வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், நாமக்கல், நீலகிரி, திருப்பூர், கோயம்புத்தூர்,ஈரோடு, கரூர், திருச்சிராப்பள்ளி, அரியலூர், பெரம்பலூர், சிவகங்கை, விருதுநகர், தேனி, திண்டுக்கல், மதுரை, தென்காசி, கள்ளக்குறிச்சி |
| வட தமிழக உள் மாவட்டங்கள் | வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், நாமக்கல், நீலகிரி, திருப்பூர், கோயம்புத்தூர்,ஈரோடு, கரூர், திருச்சிராப்பள்ளி, அரியலூர், பெரம்பலூர். |
| தென் தமிழக உள் மாவட்டங்கள் | சிவகங்கை, விருதுநகர், தேனி, திண்டுக்கல், மதுரை, தென்காசி. |
| கடலோரதமிழக மாவட்டங்கள் | சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி. |
| வட தமிழககடலோர மாவட்டங்கள் | சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, மயிலாடுதுறை. |
| தென் தமிழககடலோரமாவட்டங்கள் | ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி |
| டெல்டாமாவட்டங்கள் | தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை மற்றும் காரைக்கால் பகுதிகள் |
| மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்கள் | நீலகிரி, கோயம்புத்தூர்,தேனி, திண்டுக்கல், திருப்பூர், தென்காசி, விருதுநகர்,  கன்னியாகுமரி,  திருநெல்வேலி |

**<u>மழைப்பொழிவின்பரவல்</u>**:


| (விழுக்காடு)மழைபதிவானஇடங்கள் | வகைப்பாடு |
|---|---|
| 76-100 | பெரும்பாலான |
| 51-75 | அநேக |
| 26-50 | ஒருசில |
| 1-25 | ஓரிரு |
| மழையில்லை | வறண்ட |

**<u>மழைப்பொழிவின்தீவிரம்</u>**: (**செ.மீ.**)


| **1 செ.மீ. வரை** | லேசானமழை |
|---|---|
| **2-6** | மிதமானமழை |
| **7-11** | கனமழை |
| **12-20** | மிககனமழை |
| **≥ 21** | அதி கனமழை |


OBSERVED AND FORECAST TRACK OF CYCLONIC STORM "DITWAH"
OVER COASTAL SRI LANKA & ADJOINING SOUTHWEST BAY OF BENGAL
BASED ON 0300 UTC (0830 Hrs. IST) OF 28TH NOVEMBER 2025
01/12, 25KT, D
01/00, 30KT, DD
30/12, 35KT, CS
30/00, 40KT, CS
29/12, 40KT, CS
29/06, 40KT, CS
28/18, 40KT, CS
28/12, 35KT, CS
28/06, 35KT, CS
28/03, 34KT, CS
28/00, 35KT, CS
27/18, 35KT, CS
27/12, 35KT, CS
27/06, 35KT, CS
27/03, 30KT, DD
27/00, 30KT, DD
26/18, 25KT, D
DATE/TIME IN UTC
IST=UTC + 0530
L: LOW PRESSURE AREA
WML: WELL MARKED LOW PRESSURE AREA
D: DEPRESSION (17-27 KT)
DD: DEEP DEPRESSION (28-33 KT)
CS: CYCLONIC STORM (34-47 KT)
SCS: SEVERE CYCLONIC STORM (48-63KT)
VSCS: VERY SEVERE CYCLONIC STORM (64-89 KT)
ESCS: EXTREMELY SEVERE CYCLONIC STORM (90-119 KT)
SuCS: SUPER CYCLONIC STORM ≥ 120 KT)
LESS THAN 34 KT
34-47 KT
≥ 48 KT
OBSERVED TRACK
FORECAST TRACK
CONE OF UNCERTAINTY


**நாள் - 1**


தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளுக்கான
கனமழை எச்சரிக்கை : 28/11/2025
இந்திய வானிலை ஆய்வு துறை
மண்டல வானிலை ஆய்வு மையம்
சென்னை
நாள் 1 : 28.11.2025
Warnings
Watch (Be Updated)
Alert (Be Prepared)
Warning (Take Action)
No Warning (No Action)
மழையளவு [மி. மீ]
கனமழை (64.5 - 115.5 மி. மீ )
மிக கனமழை (115.6 - 204.4 மி. மீ)
அதி கனமழை >204.4 மி. மீ


## நாள் - 2


தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளுக்கான
கனமழை எச்சரிக்கை : 28/11/2025
இந்திய வானிலை ஆய்வு துறை
மண்டல வானிலை ஆய்வு மையம்
சென்னை
நாள் 2 : 29.11.2025
Warnings
Watch (Be Updated)
Alert (Be Prepared)
Warning (Take Action)
No Warning (No Action)
மழையளவு [மி. மீ]
கனமழை (64.5 - 115.5 மி. மீ )
மிக கனமழை (115.6 - 204.4 மி. மீ)
அதி கனமழை >204.4 மி. மீ

## நாள் - 3





# நாள் - 4





# <u>தரைக்காற்று எச்சரிக்கை</u>

# நாள் - 1




தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளுக்கான
தரைக்காற்று எச்சரிக்கை : 28/11/2025
இந்திய வானிலை ஆய்வு துறை
மண்டல வானிலை ஆய்வு மையம்
சென்னை
நாள் 1 : 28/11/2025
திருவள்ளூர்
சென்னை
வேலூர்
ராணிப்பேட்டை
காஞ்சிபுரம்
கிருஷ்ணகிரி
திருப்பத்தூர்
செங்கல்பட்டு
திருவண்ணாமலை
தருமபுரி
விழுப்புரம்
புதுச்சேரி
கள்ளக்குறிச்சி
சேலம்
ஈரோடு
நீலகிரி
கடலூர்
நாமக்கல்
பெரம்பலூர்
மயிலாடுதுறை
அரியலூர்
திருச்சிராப்பள்ளி
காரைக்கால்
கோவை
திருப்பூர்
கரூர்
திருவாரூர்
தஞ்சாவூர்
நாகப்பட்டினம்
திண்டுக்கல்
புதுக்கோட்டை
சிவகங்கை
மதுரை
தேனி
விருதுநகர்
ராமநாதபுரம்
தென்காசி
தூத்துக்குடி
திருநெல்வேலி
கன்னியாகுமரி
தரைக்காற்று எச்சரிக்கை
50-60 kmph gusting upto 70 kmph
40-50 kmph gusting upto 60 kmph


# நாள் - 2




தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளுக்கான
தரைக்காற்று எச்சரிக்கை : 28/11/2025
இந்திய வானிலை ஆய்வு துறை
மண்டல வானிலை ஆய்வு மையம்
சென்னை
நாள் 2 : 29/11/2025
திருவள்ளூர்
சென்னை
வேலூர்
ராணிப்பேட்டை
காஞ்சிபுரம்
கிருஷ்ணகிரி
திருப்பத்தூர்
செங்கல்பட்டு
திருவண்ணாமலை
தருமபுரி
விழுப்புரம்
புதுச்சேரி
கள்ளக்குறிச்சி
சேலம்
ஈரோடு
நீலகிரி
கடலூர்
நாமக்கல்
பெரம்பலூர்
மயிலாடுதுறை
அரியலூர்
திருச்சிராப்பள்ளி
காரைக்கால்
கோவை
திருப்பூர்
கரூர்
திருவாரூர்
தஞ்சாவூர்
நாகப்பட்டினம்
திண்டுக்கல்
புதுக்கோட்டை
சிவகங்கை
மதுரை
தேனி
விருதுநகர்
ராமநாதபுரம்
தென்காசி
தூத்துக்குடி
திருநெல்வேலி
கன்னியாகுமரி
தரைக்காற்று எச்சரிக்கை
70-80 kmph gusting upto 90 kmph
55-65 kmph gusting upto 75 kmph



# நாள் - 3





தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளுக்கான
தரைக்காற்று எச்சரிக்கை : 28/11/2025
இந்திய வானிலை ஆய்வு துறை
மண்டல வானிலை ஆய்வு மையம்
சென்னை
நாள் 3 : 30/11/2025
திருவள்ளூர்
சென்னை
ராணிப்பேட்டை
காஞ்சிபுரம்
வேலூர்
கிருஷ்ணகிரி
திருப்பத்தூர்
செங்கல்பட்டு
திருவண்ணாமலை
தருமபுரி
விழுப்புரம்
புதுச்சேரி
கள்ளக்குறிச்சி
சேலம்
ஈரோடு
நீலகிரி
கடலூர்
நாமக்கல்
பெரம்பலூர்
அரியலூர்
மயிலாடுதுறை
திருச்சிராப்பள்ளி
திருப்பூர்
கோவை
கரூர்
காரைக்கால்
திருவாரூர்
தஞ்சாவூர்
நாகப்பட்டினம்
திண்டுக்கல்
புதுக்கோட்டை
சிவகங்கை
மதுரை
தேனி
விருதுநகர்
ராமநாதபுரம்
தென்காசி
தூத்துக்குடி
திருநெல்வேலி
கன்னியாகுமரி
தரைக்காற்று எச்சரிக்கை
60-70 kmph gusting upto 80 kmph
55-65 kmph gusting upto 75 kmph


## Fishermen Warning Graphics




**Legend**

- Squally Weather with wind speed 35-45 kmph gusting to 55 kmph
- Squally Weather with wind speed 40-50 kmph gusting to 60 kmph
- Squally Weather with wind speed 45-55 kmph gusting to 65 kmph
- Squally wind with speed 45-55 kmph gusting to 65 kmph
- Squally wind with speed 50-60 kmph gusting to 70 kmph
- Squally wind with speed 55-65 kmph gusting to 75 kmph
- CS with Gale winds with speed 60-80 kmph gusting to 90 kmph
- SCS with Gale wind speed 90-110 kmph gusting to 120 kmph
- VSCS with Gale wind speed 120-165 kmph gusting to 185 kmph
- ESCS with Gale wind speed 165-220 kmph gusting to 245 kmph

Fishermen are advised not to venture into the marked areas.